1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற கருத்து பரிசீலிக்கப்படும்.

சார் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

*வினா 8313 திரு. வெ. கோவிந்தன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

10-40 மணி

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு தேர்வு நிலைப் பேரூராட்சியைச் சுற்றி 25 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் பத்திரப் பதிவு செய்ய வேண்டுமானால் 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குடியாத்தத்திற்குத் தான் செல்ல வேண்டியுள்ளது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையைப் போக்க பேரணாம்பட்டில் இந்த ஆண்டு சார் பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு உத்தரவு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த நண்பருக்கு, மாண்புமிகு உறுப்பினருக்கு அந்தப் பேரணாம்பட்டு கிராமம் பற்றி ஒரு சில குறிப்பினை வழங்க விரும்புகிறேன். பேரணாம்பட்டு கிராமம் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் குடியாத்தம் தாலுக்காவைச் சார்ந்தது. இவ்வூரில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இவ்வூருக்குச் செல்ல போதுமான போக்குவரத்து வசதிகள் உள்ளன. இவ்வூரைச் சுற்றி வருவாய்க் கிராமங்கள் அருகருகே கூடுதல் எண்ணிக்கையில் உள்ளன. மேலும் இவ்வூரில் காவல் நிலையம், தபால் நிலையம்,

மாநில அரசு வங்கி, கனரா வங்கி, செண்ட்ரல் வங்கி, பேருந்து நிலையம் ஆகியவை உள்ளன. உத்தேசிக்கப்பட்டுள்ள பேரணாம்பட்டு சார் பதிவாளர் ஆட்சி எல்லையாக குடியாத்தம் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 25 கிராமங்களைப் பிரித்துச் சேர்க்கலாமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்கள் அனைத்தும் தற்போது அவை இணைந்து இருக்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ள தூரத்தை விட பேரணாம்பட்டுக்கு மிக அருகாமையிலேயே உள்ளது.

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் வியாபாரப் பெருங்குடி மக்கள், தோல் தொழிலாளர்கள் ஆகியோர் எல்லாம் இருக்கிறார்கள். அங்கு, குறிப்பாக, பெண்கள் பெயரிலே பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை தனிக் கவனம் செலுத்தி, பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுவதற்கு அரசு உத்திரவு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: தலைவர் அவர்களே, அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். புதிய சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஆகும் தொடர் செலவு ரூ. 70,258; தொடராச் செலவு ரூ. 40,000. பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டால் ஆண்டு சராசரி வருவாய் 1 கோடியே 90 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் இருக்குமெனக் கருதப்படுவதாலும், கணக்கிடப்படுவதாலும், பேரணாம்பட்டு பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் சார் பதிவாளர் அலுவலகம் துவக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளமையாலும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்க ஆணையிடவும், அது செயல்படத் தேவையான பணியிடங்களை வழங்கவும் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படலாம். அத்தோடும் இக்கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு அரசிடமிருந்து 1990-91 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டங்களில் செயல்படுத்தக் கூடிய இனங்கள் குறித்து அறிக்கை கோரும்போது இச் செயற் குறிப்பையும் அத்திட்டத்தில் சேர்த்துப் பரிசீலிக்க அரசுக்கு அனுப்புமாறு பதிவுத் துறைத் தலைவர் கேட்கப்பட்டுள்ளார். ஆனால் இன்றைக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு திறப்பதற்கு சாத்தியக் கூறு இல்லை என்று பதிவுத் துறை தலைவர் தெரிவித்து இருக்கிறார். ஆகையினாலேதான் நிச்சயம் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படமாட்டாது என்பதைக் கருத்தில் கொண்டு தான் முதலில் நான் விடை அளிக்கும் போது சொன்னேன், அந்தச் செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை என்று.